**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Calender Case No. 1 of 2024**

**Deposition of witness for : PW11**

**Name : முனியப்பன்**

**Father's /Husband Name/ : முனியப்பன்**

**Village : வெங்கட்டானூர்**

**Taluk : தருமபுரி**

**Calling : கூலி வேலை**

**Age : 69**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.**

**எதிரிகள் 1 முதல் 6 வரை ஆஜர் 7ம் எதிரி ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் வெங்கட்டானூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகளை தெரியாது. ஆஜர் எதிரிகளை மருத்துவமனையில் பார்த்து உள்ளேன். நான் 4 ஆண்டுகளுக்கு முன்பு நீரிழிவு நோய் சிகிச்சைக்காக காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனைக்கு மதியம் 1 1/2 மணிக்கு சென்றிருந்தேன். அப்போது சுமார் 2 மணிக்கு நான் வெளியே வரும்போது உள்நோயாளியாக இருந்த ஆஜர் எதிரிகள் அடித்தார்கள். முனியம்மாளை நீல நிறம்

சட்டை அணிந்துள்ள ( ராஜ்குமார் ) எதிரி கண்ணில் குத்திவிட்டார். அவர் கண் போய்விட்டது. பின்பு போலிஸார் வந்தார்கள். ஆம்புலன்ஸ் வரவழைத்து கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் தருமபுரி பொம்மிடி தாலுக்கா வெங்கட்டாமனூர் கிராமம் ஆகும். தருமபுரியில் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். பொதுவாக சுகர் பிபி உள்ளவர்களை அரசு மருத்துவமனைகளில் காலையில் தான் பரிசோதிப்பது வழக்கம் என்றால் சரிதான். கருணாநிதி முனியம்மாள் குடும்பத்தாரும் எதிரிகள் குடும்பத்தாரும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சுமார் 20 வருடமாக நான் வேலைக்கு சென்று வரும்போது முனியம்மாள் வீட்டில் தான் தங்கி சாப்பிடுவேன் என்றால் ஓட்டலில் தான் சாப்பிடுவேன். நான் முனியம்மாள் கேட்டுகொண்டதன் படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறும் நாள் தேதி என்னவென்றால் தெரியாது. சம்பவம் நடந்த சமயத்தில் மருத்துவமனையில் கூட்டம் நிறைய இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்திலே காவேரி பட்டிணம் போலிஸார் வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பிறகு என்னை யாரும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் போலிஸ் விசாரணையில் முனியம்மாளை கண்ணில் குத்திவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன்.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.